சென்னை வர்த்தக மையத்தில் நேற்று (09.01.2024) பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற முன்னாள் அரசு பள்ளி மாணவர்களை ஒன்றிணைக்கும் முன்னெடுப்பான "விழுதுகள் தொடக்க விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னாள் மாணவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் திருமதி மா.ஆர்த்தி, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், (விருப்ப ஓய்வு), பொது நூலக இயக்குநர் க. இளம்பகவத், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடிடும் வகையில், சேப்பாக்கம் பகுதி, 62 (அ) வட்டக்கழகத்திற்குட்பட்ட, சிந்தாதிரிப்பேட்டை சாமி தெரு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் 1000 பேருக்கு அரிசி, வெல்லம், புத்தாடைகள் உள்ளிட்ட பொருள் தொகுப்புகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். தயாநிதி மாறன் எம்.பி., நே.சிற்றரசு, மதன்மோகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனுள்ளனர்.

தமிழர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு

திருக்கோயில் அர்ச்சகர்கள் - பணியாளர்களுக்கு புத்தாடைகள், சீருடைகள்!

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, ஜன.10

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (09.01.2024) சென்னை, பாரிமுனை, காளிகாம்பாள் திருக்கோயிலில் தமிழர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு சென்னை மண்டலத்தைச் சேர்ந்த 74 திருக்கோயில்களின் 128 அர்ச்சகர்கள் / பட்டாச்சாரியார்கள் / ஓதுவார்கள்/ பூசாரிகளுக்கு புத்தாடைகளையும், 339 பணியாளர்களுக்கு சீருடைகளையும் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின், 2022-ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்களின் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் மேல் நலன்களை காக்கும் வகையில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு புத்தாடைகளையும், சீருடைகளையும் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் இரண்டு செட் புத்தாடைகள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டு 12,911 அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு புத்தாடைகள் மற்றும் சீருடைகள் வழங்குகின்ற நிகழ்ச்சியை காளிகாம்பாள் திருக்கோயிலில் தொடங்கி வைத்துள்ளோம். இதற்காக ரூ.1.49 கோடி செலவிடப்படுகிறது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருக்குளங்கள் மற்றும் திருத்தேர்களை புனரமைத்தல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், நிலங்களை அளவீடு செய்து பாதுகாத்தல், வருவாய் இனங்களை பெருக்குதல் போன்ற பணிகளோடு அர்ச்சகர்களின் நலன் காக்கும் வகையில் அவர்களுக்கு குடியிருப்புகள், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், பொங்கல் கொடை, அர்ச்சகர், ஓதுவார் போன்ற பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை போன்றவை வழங்கப்பட்டு வருகிறது.

நாளைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு பொங்கல் கொடை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளார்.

திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவாக்கம், நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் திட்டம், கட்டணமில்லா திருமணங்கள், இராமேசுவரம் - காசி ஆன்மிக சுற்றுலா, விபூதி மற்றும் குங்குமம் உற்பத்தி மையங்கள், சித்தர்கள் மற்றும் சான்றோர்களுக்கு விழா நடத்துதல் என இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றிலே இல்லாத அளவிற்கு பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்கி ஆன்மிக புரட்சியை ஏற்படுத்துகின்ற ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது.

தமிழ்நாட்டிலேயே திருவள்ளுவருக்கென்று அமைந்திருக்கின்ற மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் முழுவதுமாக புனரமைக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு நாகப்பட்டினம் மாவட்டம், துளசியாப்பட்டினத்தில் ரூ.17 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

குன்றத்தூரில் இரண்டு நாட்கள் கொண்டாடப்பட்டு வந்த சேக்கிழார் விழாவினை மூன்று நாட்களாக மாற்றி சிறப்பாக கொண்டாடி வருகிறோம். ஆன்றோர்களையும், சான்றோர்களையும் பெருமைப்படுத்துகின்ற ஆட்சி முதலமைச்சர் அவர்களின் ஆட்சி என்பதற்கு சான்றாகும்.

சபரிமலை ஐயப்பன் திருக்கோயிலுக்கு வரலாறுகாண அளவிற்கு பக்தர்கள் வருவதால் நீண்ட வரிசையில் அதிக நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்வது குறித்து முதலமைச்சர் அவர்கள் நேரடியாக தொடர்பு கொண்டு, பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பும், தரிசனத்திற்குண்டான ஏற்பாடுகளையும் நல்க வலியுறுத்தி இருக்கின்றார். எங்களையும் இதுதொடர்பாக கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிட்டிருக்கின்றார்.

சபரிமலையில் பக்தர்கள் நலனை கருதி கேரளா அரசாங்கம் எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் துரிதமாகத் தான் இருக்கிறது. வருங்காலங்களில் இதுபோன்ற கூட்ட நெரிசல்களை கட்டுப்படுத்துவதற்கும் கேரள அரசு பல்வேறு திட்டங்களையும், முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. அவற்றிற்கு தமிழ்நாடு அரசும் உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், இணை ஆணையர்கள் ச. இலட்சுமணன், திருமதி ஜெ.முல்லை, துணை ஆணையர் ஆர்.ஹரிஹரன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் – கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பகத்தில்

'நட்புடன் உங்களோடு' தொலைபேசி வழி மன நலச்சேவை! - இரண்டாம் பிரிவு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.10-

கீழ்பாக்கம் அரசு மனநலக் காப்பகத்தில் "நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை" திட்டத்தின் இரண்டாவது பிரிவை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில் நேற்று (09.01.2024) சென்னை, கீழ்பாக்கம், அரசு மனநல காப்பகத்தில், "நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை" திட்டத்தின் இரண்டாவது பிரிவினை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது :-

நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை திட்டம் ஏற்கனவே முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 27.10.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. 24 மணி நேரமும் செயல்படும் இந்த மனநல சேவை திட்டத்தில், மனநல மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் ஆற்றுப்படுத்துனர்கள் ஆகியோர் அடங்கி குழுக்களின் மூலம் மனநல சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மனநல சேவைகள் மற்றும் ஆலோசணைகள் வழங்கப்படுவதன் மூலம் பொதுமக்களிடம் பெரிய அளவில் வரவேற்பு கிடைத்துள்ளது. திட்டம் தொடங்கிய 27.10.2022 முதல் இது வரை 40,000க்கும் மேற்பட்ட அழைப்புகள் மனநல ஆலோசனைகளுக்காக பெறப்பட்டுள்ளது. இதில் 70% அழைப்புகள் 18 வயது முதல் 40 வயதிற்கு உட்பட்டவர்களுடைய அழைப்புகளாகும். மன உளைச்சல், அதீத மனக்கவலை, உறவு சார்ந்த சிக்கல்கள் மற்றும் இதர உளவியல் பிரச்சினைகள் சார்ந்த அழைப்புகளே அதிகம் பெறப்பட்டுள்ளன.

கடந்த 10.10.2023 அன்று டெல்லியில் நடந்த உலக மனநல நாள் விழாவில் "நட்புடன் உங்களோடு "(TeleMANAS14416) சேவை மூலம் ஓராண்டில் அதிக எண்ணிக்கையிலான அழைப்புகளை கையாண்டமைக்கான ஒன்றிய அரசின் விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது. "நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை" திட்டத்தின் இரண்டாவது பிரிவானது, அரசு மனநல மருத்துவமனை வளாகம், கீழ்ப்பாக்கத்தில் இன்று (09.01.2024) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 25 மனநல மருத்துவர்களும், ஆண்டுக்கு 18 முதுகலை மாணவர்கள் என 54 முதுகலை மனநல மருத்துவ மாணவர்களும், 3 மருத்துவ உளவியலாளர்கள் மற்றும் 10 முதுகலை உளவியல் மாணவர்களை கொண்டு இயங்கி வரும் இந்த உயர் சிறப்பு மனநல மருத்துவனையின் வளாகத்தில் இன்று "நட்புடன் உங்களோடு" இரண்டாவது பிரிவு தொடங்கி வைக்கப்பட்டது.

202223 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், கீழ்ப்பாக்கம் அரசு மனநல மருத்துவமனையானது, தமிழ்நாடு மனநல மற்றும் நரம்பியல் நிறுவனம் (Tamilnadu Institute of Mental Health and Neuroscience TNIMHANS) என்ற மாநில அளவிலான ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்தப்பட உள்ளது. இந்த ஒப்புயர்வு மைய வளாகத்தில் "நட்புடன் உங்களோடு" பிரிவு 2ம் இயங்க உள்ளதால் மனநலம் சார்ந்த ஆய்வுகளுக்கான கள நில வரங்களை புரிந்து கொள்ள பெரிதும் உறுதுணையாக இருக்கும். இதற்கு முன்பே, 104 என்ற அவசர உதவி எண் மூலம் நீட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு கடந்த 3 ஆண்டுகளாக மனநல ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள 36 மருத்துவ கல்லூரி மாணவ மாணவியர்களுக்கும் மனநல ஆலோசணைகள் வழங்கும் விதமாக "மனம்" என்னும் மனநல நல்லாதரவு மன்றங்கள் தொடங்கப்பட்டு, பொறியியல் மற்றும் கலைக்கல்லூரி மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இந்த செயல்பாடுகளின் மூலம் மாணவர்கள் மற்றும் இளம் சமுதாயத்தினர்கள் மத்தியில் தற்கொலை மேற்கொள்ளும் எண்ணம் தடுக்கப்பட்டு வருகிறது.

ஜல்லிக்கட்டு போட்டி

ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும் இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. மாடுபிடி வீரர்களின் காயங்களுக்கு கட்டு போடுவது, தேவையான மருந்துகளை வழங்குவது போன்ற பணிகள் சிறப்பு மருத்துவர்களை கொண்டு செய்யப்படுகிறது. மேலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறும் மாவட்டங்களில் உள்ள மருத்துவ அலுவலர்களோடு தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறை தொடர்ந்து தொடர்பில் இருந்துக் கொண்டிருக்கிறது, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெற்றியழகன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. தேரணிராஜன், அரசு மனநல காப்பகத்தின் இயக்குநர் மரு. மலையப்பன், மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

தொ.மு.ச. - ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களால் 95 சதவிகிதம் பேருந்துகள் இயக்கம்!

அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் தோல்வி!

மக்களுக்கு இடையூறு இல்லாமல் பேருந்துகள் இயக்கிய அனைத்து தொழிலாளர்களுக்கும் ஐ.என்.டி.யூ.சி நன்றி!

சென்னை, ஜன.10-

ஐ.என்.டி.யூ.சி தொழிலாளர் சம்மேளனம் போக்குவரத்து பேரவை முதன்மை பொதுச்செயலாளர் ந.க. நாராயணசாமி, பேரவை கௌரவத் தலைவர் மு.பன்னீர்செல்வம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவரும் பேரவைத் தலைவருமான டாக்டர். எம்.கே. விஷ்ணுபிரசாத் எம்.பி. வழிகாட்டியின் பேரில் அனைத்து அன்பான வேண்டுகோளை ஏற்று போக்குவரத்து தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கினோம். கூட்டமைப்பின் மூலம் அரசின் கவனத்தை ஈர்க்க பல்வேறு போராட்டங்களையும் நடத்தினோம். அரசும் முக்கியமான கோரிக்கைகளை ஓய்வூதியர்களுக்கு 8 ஆண்டுகாலமாக வழங்காமல் இருக்கின்ற பஞ்சப்படியை முதலில் அறிவிக்க வேண்டும். (Implement) 15வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை தேதியையும் அறிவிக்க வேண்டும் என்று கூறினோம். அதை முன்னிட்டு மக்கள் முன் நோட்டீஸ் வழங்கி அவர்களின் கவனத்தையும் ஈர்த்தோம். இதற்காக நடந்த சமரச பேச்சுவார்த்தையிலும் சேர்ந்தும் DCLல் நமது நிலைபாட்டை தெரிவித்தோம்.

ஆனால் 10 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்த அ.இ.அதி.மு.க அரசு எதையும் கண்டுகொள்ளாமல் நம்மைப் பழிவாங்கியது என்பது தொழிலாளர்கள் அனைவரும் அறிந்ததே.

ஆட்சியில் இருந்தபோது அ.இ.அ.தி.மு.க அரசு அரசியல் நோக்கத்தோடு கண்டும் காணாமல் இருந்துவிட்டது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஆதாயம் தேட அரசியல் காரணத்திற்காக தன்னோடு சில சங்கங்களை இணைத்துக் கொண்டு ஜனவரி 9 ஆம் தேதி வேலை நிறத்தம் செய்வதாக அறிவித்து. நோட்டீஸ் வழங்கியது.

அதேநேரத்தில் தொழிலாலளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று எங்களது கூட்டமைப்பும் அறிவித்திருந்தோம்.

ஆனால் அவர்கள் ஆட்சி காலத்தில் எதையுமே செய்யாத அ.இ.அ.தி.மு.க. வோடு கூட்டணி தர்மத்தையும் மீறி சி.ஐ.டியும் அவர்களோடு இணைந்து பேட்டி கொடுப்பதும் துணையோடு போராட்டத்தில் ஈடுபடுவதும் ஏற்புடையதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எதிரிகளுடன் கைகோர்த்துப் போராடுவது நமது கூட்டணிக் கட்சிகளை பாதிக்கும்.

தி.மு.க. அரசு இதற்கு முன்பு ஆட்சியில் இருந்த போதெல்லாம் நமக்குச் செய்த நன்மைகளை எல்லாம் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும். அதேபோன்று கண்டிப்பாக நமது கோரிக்கைகளை கனிவோடு பரிசீலித்து அரசு அறிவிக்கும் என்று முழுமையாக நம்புகிறோம்.

தி.மு.கஅரசும் தமிழ்நாடு முதலமைச்சரும் என்றைக்கும் தொழிலாளர்கள் மீது பாசம் கொண்டவர்கள்.

போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் அவர்களும் தொழிலாளர்கள் மீது கருணைகொண்டவர்.

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுளோம் அதற்கான நிவாரண பணிகளை அரசு ஈடுபட்டு வருகிறது.

தமிழர்களின் தலையாய பண்டிகை தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை குடும்பத்தோடு தமிழக மக்கள் சொந்த ஊர்களுக்கு சென்று உழவர் திருநாள் பண்டிகை கொண்டாவியிருக்கும் இந்த நேரத்தில் போராட்டம் நடத்துவதை தவிர்த்துவிடுங்கள். பொங்கல் பண்டிகை முடிந்தபிறகு அழைத்துப் பேசுகிறோம். என்ற அமைச்சரின் நியாயமான கோரிக்கையை ஏற்றும், பொங்கல் பண்டிகை நேரத்தில் பேருந்து வேலை நிறுத்தம் நடத்தினால் தமிழ்நாடு மக்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடம் என்பதாலும் அமைச்சர் அவகாசம்தான் கேட்கிறார். இல்லை என்று இதுவரை சொல்லவில்லை. எனவே இதையெல்லாம் கவனத்தில் கொண்டுதான். அரசுபேருந்து வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவை பேரவை எடுத்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

தொ.மு.ச., ஐ.என்.டி.யூ.சி தொழிலாளர்கள் இதை எண்ணிப் பார்த்துதான், இன்றைக்கு 95 சதவீதம் அளவிற்கு பேருந்துகளை இயக்கினார்கள். இன்றைய வேலைநிறுத்தம் பிசு பிசுத்தது, மக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் பேருந்துகளை இயக்கிய அனைத்து தொழிலாளர்களுக்கும் ஐ.என்.டி.யு.சி பேரவை சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றைக்கும் நாம் எதையும் விட்டுக் கொடுக்கத் தவறியதில்லை.

தொழிலாளர்கள் நலனுக்காக அரசுக்கு என்றும் நாம் துணைநின்று கோரிக்கைகளை வென்றெடுப்போம்.

உறவுக்குக் கை கொடுப்போம் தொழிலாளர்களின் உரிமைக்கு என்றும் குரல் கொடுப்போம்.

இவ்வாறு தொழிற்சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசின் அறிவிப்பின்படி கிழக்கு தாம்பரம் மிசிரிமல் புகராஜ் போரா அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர், மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. 237 விலையில்லா மிதிவண்டிகளை மாணவ மாணவிகளுக்கு வழங்கினார். ஐந்தாவது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் மாமன்ற உறுப்பினர் சசிகலா கார்த்தி மற்றும் முன்னாள் மாமன்ற உறுப்பினர் வி.முனுசாமி, வி.கார்த்திக் என்.நசீர், பிரஸ் சுந்தரம் சங்கர் திவாகர் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 51வது வார்டு சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி **நீரஞ்சனா ஜெகதீசன்** அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 09.01.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

திருவள்ளூர் நகரம் வார்டு எண் 16 க்குட்பட்ட ஜெ.என்.சாலை புங்கத்தூர் பகுதியில் வசித்து வந்த கட்டுமான கூலி தொழிலாளி ராஜேஷ் (வயது 35) விபத்தில் சிக்கி சென்னை ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவர்களின் தீவிர சிகிச்சை பலனளிக்காமல் மூளை சாவு அடைந்தார். இச்செய்தியறிந்த அவரது குடும்பத்தினர் அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்தனர். இவரது உடல் உறுப்புகள் அகற்றப்பட்டு பல நபர்களுக்கு பொருத்தப்பட்டன. இதனை அடுத்து அவரது உடல் திருவள்ளூரில் உள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டது இத்தகவல் அறிந்த திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் நேரில் சென்று மறைந்த ராஜேஷ் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார் . குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்கினார். திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்தால் மறைந்த ராஜேஷ் உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் கூவூர் எம். ராஜேந்திரன், நகர்மன்ற முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், காஞ்சிப்பாடி பி. சரவணன், நகர் மன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஓ. டி. ஸ்ரீதர், எம். பரசுராமன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் என். பாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.